# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>O.S.No. 60/2021</u>

2023–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05–ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியமாகிய **வா.சா.2 வது** நபரின் வாக்குமூலம். (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.K.அனிதா, கிரேடு 1 பென்ஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமஜெயம் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

<u>**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வாதிகள் குடும்பத்தை எனக்கு தெரியும். வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் அனைவரும் ஒரே குடும்பமாக தான் இருக்கிறார்கள். 1–ம் பிரதிவாதி வீட்டில் தான் வாதிகள் இருக்கிறார்கள். சரவணம் விவசாயமும், மீன் பண்னை வைத்திருந்தார். மீன் பண்ணை வைப்பதற்காக State Bank ல் ரூ.7,50,000/– கடன் வாங்கியிருந்தார். அந்த வியாபாரம் நஷ்ட ஆகிவிட்டது. கடன் வாங்கும் போது சொத்துக்களை வங்கியில் கடன் வைத்திருந்தார். கடன் செலுத்தாததால் சொத்துக்களின் பேரில் வங்கி நடவடிக்கை எடுத்து ஏலத்திற்கு வந்துவிட்டது என்றால் சரிதான். ஏலத்திற்கு முன்பே அவர் இறந்துவிட்டார். அந்த சமயத்தில் பிரதிவாதிகளிடம் சொத்துக்களை விற்றுவிட்டு பணம்

வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அடமானம் தான் வைத்து பணம் வாங்கினார்கள்.3-ம் பிரதிவாதி க்கு ரூ.6,00,000/- க்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. சரவணக்குமாருக்கு பாகத்தில் வந்த சொத்தை வேறு ஒருவருக்கு விற்றுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரவணக்குமார் இறந்தபிறகு கீதா ஒரு சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் சரிதான்,. அதை வாங்குவதற்கு தான் 3-ம் பிரதிவாதிக்கு சொத்தை விற்றார் என்றால் சரியல்ல, அடமானம் தான் வைத்தார். அதில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. அந்த பத்திரத்தை நான் பார்க்கவில்லை. அடமானம் வைத்ததாக கீதா சொல்லி தான் நான் சொல்கிறேன் என்று சொன்னால் பணம் கொடுத்த போது நான் இருந்தேன். பணத்தை ரொக்கமாக தான் கையில் கொடுத்தார்கள். அதை நான் பார்த்தேன். 4-ம் பிரதிவாதி பழனிவேலுக்கு இன்னொரு சொத்தை விலை பேசினார்கள் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வங்கி மூலமாக பண பரிவர்த்தனை செய்தார்கள் என்றால் ரொக்கமாக தான் கொடுத்தார்கள். வங்கியில் ரூ.41,00,000/- செலுத்த வேண்டும் என்று அறிவிப்பு அனுப்பியது பற்றி எனக்கு தெரியாது. சரவணக்குமார் இறந்த போது வங்கி கடன் ரூ.19,00,000/- இருந்தது. 4-ம் பிரதிவாதியிடம் பணம் வாங்கி தான் வங்கி கடன் செலுத்தினார் என்றால் சரிதான். அவ்வாறு பணம் செலுத்தாமல் இருந்திருந்தால் வங்கி மூலம் சொத்துக்கள் ஏலம் போயிருக்கும் என்றால் சரிதான்,. எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தை பார்க்காமலேயே நான் அடமானம் வைத்தார்கள் என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பணம் கொடுத்ததை பார்த்து தான் சொன்னேன்.

சிங்காரவேலுக்கு ஒரு சொத்தை ரூ.6,00,000/- கிரையம் செய்தார்கள் என்றும், பழனிவேல் கிரைய ஒப்பந்தம் ரூ.13,50,000/-செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.